சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

செய்திமடல் - 36 | 26-01-2012



19-01-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

தலைப்பு : விஞ்ஞானத்தின் வரலாறு

தொடக்கவுரையாடல் : ராஜரட்ணம்

அறிவு வளர்ச்சியில் வரலாற்றுச் செய்திகளின் அவசியமும் தேவையும். (கண்டுபிடிப்பு சார்ந்த அறிவுவிருத்தி என்பது தேவை எனப்படும் தந்தையாலும் அனுபவம் என்ற தாயாலும் வளர்த்தெடுக்கப்படும் குழந்தையாகும்)

மனித அறிவுவளர்சியில் (அறிவைத் தேடுதல் என்பது மனிதனின் தவிர்க்க முடியாத தேவையாகும்)

I. அறிவுமுதல்வாதக் கருத்துக்கள்
II. அனுபவமுதல்வாதக் கருத்துக்கள்
III. எடுத்துரைப்பு அறிவு

என்பவை முக்கியம் பெறுகின்றன. இவை அறிவுவளர்சி பற்றி அறிவதற்கான வரலாற்று அம்சங்களாகும்.
வரலாறு என்பது கடந்த கால நிகழ்வுகளின் ஆய்வு.இது வெறும் சம்பவங்களின் தொடர்ச்சி அல்ல தனிநபர், சம்பவங்கள், காலகட்டங்கள், இடங்கள் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை பொதுவாகவும் உள்ளது உள்ளவாறும் கருத்துள்ள வகையில் மேற்கொள்ளப்படும் ஓர் ஆய்வாகும். "வரலாற்று நேர்வுகளுகும் வரலாற்று ஆசிரியனுக்கும் இடையில் இடம்பெறும் இடையறாத செயலெதிர் விளைவே வரலாறு ஆகும். அது கடந்தகாலத்திற்கும் நிகழ் காலத்திற்கும் இடையிலான முடிவிலா உரையாடலின் பெறுபேறாகும்" E.H.CARR என்பவர் கூறியுள்ளார்.

வரலாற்று ஆசிரியர் நோக்கில் நேர்வு என்பது.
I. ஆய்வாளனால் நேரடியாக அவதானிக்கப்பட்டவை.
II. சான்றுகள் மூலம் பெறப்பட்டவை

நேர்வுகள் பற்றி இரு கருத்துக்கள் நிலவுகின்றன.(ஒரு நிகழ்வு பற்றி ஆய்வாளனால் விஞ்ஞான பூர்வமாக புனரமைக்கப்படும் ஒன்றே வரலாற்று நேர்வாகும்)

1. உள்ளவற்றை அப்படியே ஏற்றல் இங்கு விளக்கமோ விபரிப்போ இடம்பெறக்கூடாது.
2. வரலாற்றாளர்களே வரலாற்று நேர்வுகளை உருவாக்குகின்றனர்.
(வரலாற்று நிகழ்வுகள் அனைத்தும் வரலாற்று நேர்வுகள் அல்ல சமூக முக்கியத்துவம்வாய்ந்தவையே வரலாற்று நேர்வுகளாகக்கொள்ளப்படவேண்டும்)

**விஞ்ஞானம் பற்றிய விளக்கங்கள்:**

விஞ்ஞானம் என்பது அறிவின் உடல்
விஞ்ஞானம் என்பது ஓர் உயிர்ப்பான தொழிற்பாடு

ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவே விஞ்ஞானம், இயற்கையில் உள்ள நேர்வுகளையும், நிகழ்ச்சிகளையும் தோற்றப்பாடுகளையும் அவதானித்து வகைப்படுத்தி. அவற்றுக்கிடையே உள்ள தொடர்புகளை அறிந்து. ஒழுங்குபடுத்தி வெளிப்படுத்தும் அறிவே விஞ்ஞானம்.
உ.ம். கையில் உள்ள பொருட்கள் கீழே வீழ்கின்றன மேசையில் உள்ள புத்தகங்களை நகர்த்தினால் அவை கிழே விழுகின்றன.
கல்லை மேலே எறிந்தால் கீழே விழ்கின்றது. ஆகவே எல்லாப் பொருட்களும் நகர்த்தினால் விழும் என்ற முடிவைப் பெறுகின்றன.

இம்முடிவிற்கு முரணாக சிறு பஞ்சுத்துண்டு விழவில்லை காற்று அடைத்த பலூன் மேலே செல்கின்றது. என்ற நிகழ்வுகளைக் காண்கின்றோம் இவ் அவதானிப்புக்களில் இருந்து கற்றைவிட பாரமற்ற பொருட்கள் விழுவதில்லை என அறிவை ஒழுங்குபடுத்துகின்றோம். இவ்வாறு பெறப்பட்ட ஓர் அறிவு நிலையே எல்லாப்பொருட்களும் புவியிர்புக்கு உட்பட்டவை என்பது.


**கார்ல் பொப்பரின் விஞ்ஞானம் பற்றிய விளக்கம்:**

மனிதனின் இயல்பு ஒரு செயலில் ஈடுபட்டு தவறுகளைத் திருத்துவது ( Trial and Error) அதாவது முயன்று தவறுதன் மூலம் உண்மைகளை அறிய முற்படுவது.

மிகுதி அடுத்த பக்கம்

அடுத்து வரும் தலைப்புக்கள்

SOPA , PIPA சட்டங்களுக்கு
இணையத்தில் எழுந்துள்ள எதிர்ப்பலை
26-01-2012



ரோசா லக்சம்பேர்க்

ரோசா லக்சம்பேர்க் (Rosa Luxemburg, மார்ச் 5, 1870/71 - ஜனவரி 15, 1919), போலந்தில் பிறந்த் ஒரு ஜெர்மனிய மார்க்சியவாதியும் சோசலிச மெய்யியலாளரும் ஒரு புரட்சியாளரும் ஆவார்.

செங்கொடி (Die Rote Fahne) என்ற இதழை ஆரம்பித்தவர் இவரே. முதலாம் உலகப் போரில் செருமனி பங்குபற்றியதை செருமனி சமூக-மக்களாட்சிக் கட்சி (ஜேர்மன் சோசியல்-டெமோகிரட்டிக் கட்சி) ஆதரித்ததைத் தொடர்ந்து இவர் மற்றொரு மார்க்சியவாதியான கார்ல் லீப்னெக்ட்டுடன் இணைந்து "புரட்சிகர ஸ்பர்டாசிஸ்ட் முன்னணி" (Spartacist League) என்ற அமைப்பை உருவாக்கினார். இதுவே பின்னர் ஜேர்மனிய கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரைப் பெற்றது. ஸ்பர்டாசிஸ்ட் லீக் தலைமையில் ஜனவரி 1919 இல் நடத்தப்பட்ட பேர்லின் புரட்சி தோல்வியில் முடிந்தது. ரோசா லக்சம்பேர்க்கின் ஆதரவிலான இப்புரட்சி ஃப்ரீகோர்ப்ஸ் என்ற வலதுசாரி துணை இராணுவக்குழுவினரால் நசுக்கப்பட்டது. ரோசா மற்றும் லீப்னெக்ட் உட்பட பல இடதுசாரிகள் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## விஞ்ஞானத்தின் வரலாறு.

(முன்பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞானி ஒருவன் தன்னிடம் தோன்றும் பிரச்சினைகளுக்கு தற்காலிக சமாதானமாக கருதுகோள் ( *Hypothesis*) ஒன்றை முன்வைத்து அதனை எதிர்வுகூறி வாய்ப்பு பார்த்து( *Testability*) பொதுமையாக்கமாக ( *Generalization* ) (விதி/கொள்ளக) ஏற்றுக்கொள்கின்றான். இச் செயல்முறையின்படி கருதுகோளின் பொய்ப்பிக்கக் கூடிய வீச்சு (*Degree*) அதிகரிக்க அதிகரிக்க அதன் உறுதித்தன்மை கூடிச்செல்லும். அதாவது அது விஞ்ஞானரீதியானது என்ற அந்தஸ்தைப் பெறும்.

விஞ்ஞான விளக்கங்கள் திருப்திகரமான விளக்கங்கள் ஆகும். நம்பகத்தன்மை உடையவையே திருப்திகரமான விளக்கங்களாகும். இதன்படி விஞ்ஞானத்தில் இறுதி விளக்கத்திற்கு (முடிந்த முடிவு) இடமில்லை. இதனை தனது எல்லைப்படுத்தும் கோட்பாட்டின் ( *Demarcation Principle* ) மூலம் விளக்கியுள்ளார்.

பொப்பர் தனது பொய்ப்பித்தல் கோட்பாட்டின்படி ( *Falsify Principle*) விஞ்ஞானம் என்பது அனுபவ சோதனை மூலம் பொய்ப்பிக்கக் கூடிய அறிவாகும் என எடுத்துக்காட்டியதுடன் அது விலக்குவதன் மூலமே முன்னேற்றம் அடைகின்றது எனவும் கூறியுள்ளார்.

**தோமஸ் கூன் :**

விஞ்ஞானம் தொடர்ச்சியாக வளர்கின்றது ஆனால் அது இடையீடு அற்ற வளர்ச்சி அல்ல எனக் கூறுவதுடன் விஞ்ஞான வளர்ச்சியை சாதாரண காலம், புரட்சிக்காலம் என எடுத்துக்காட்டியதுடன் சாதாரண காலத்தில் விஞ்ஞானம் கிடைவெட்டாக வளர்வதால் அதன் ஆளுகைப் பரப்பு விரிவடையும் புதிர்களை விடுவித்தல் என்ற வகையிலேயே விஞ்ஞானிகள் தொழிற்படுவர் இதனால் இக்காலத்தில் அறிவு திட்பமும் நுட்பமும் வாய்ந்ததாக இருக்கும் எனினும் ஓர் எல்லைக்கு அப்பால் அதன் வளர்ச்சி தேக்கம் அடையும். இதனால் விஞ்ஞானிகள் இதுவரை பயன்படுத்திய முறைகளை மாற்றவேண்டும் எனக் கூறியுள்ளார். புரட்சிக்காலத்தில் விஞ்ஞானம் குத்துவெட்டாக வளர்ச்சி அடையும் இது மேல் நோக்கிய பாய்ச்சலாக அமையும் இவ்வளற்சியினால் கட்டளைப்படிமத்தில் ( *Paradigm*) மாற்றம் ஏற்படும். (விஞ்ஞானிகள் சமூகத்தால் உருவாக்கப்பட்ட பொது உடன்பாடே கட்டளைப்படிமம் ஆகும். அதாவது விஞ்ஞானிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்பிக்கைகள் விழுமியங்கள் உத்திமுறைகள் ஆகியவற்றின் வடிவமே கட்டளைப்படிமமாகும் எனக் கூறியுள்ளார்)

## SOPA , PIPA சட்டங்களுக்கு இணையத்தில் எழுந்துள்ள எதிர்ப்பலை

**இந்த வாரம் உரையாடப்படவுள்ள தலைப்பு.**

**(மு. மயூரன், மௌ. மதுவர்மன்)**

இணையத்தில் காப்புரிமை/பதிப்புரிமை தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள்.

*SOPA / PIPA* பற்றிய சுருக்கமான அறிமுகம்.

மேற்கண்ட சட்டமூலங்களுக்கு ஆதரவான அமைப்புக்களும் அவற்றின் நோக்கங்களும்.

*SOPA/PIPA* விற்கு எதிரான எழுச்சிகளும் அவ்வெழுச்சிகளின் பின்னாலிருக்கும் அமைப்புக்களும் அவற்றின் நோக்கங்களும்.

இவ்வெழுச்சிகளுக்கும் தற்போது இணையச் சூழலில் தோன்றியுள்ள எதிர்ப்பரசியல் உணர்வுகளுக்கும் உள்ள தொடர்புகள்.


இணையத்தணிக்கை.

புலமைச்சொத்துரிமை.


*SOPA/PIPA* ஆகியவற்றின் இன்றைய நிலையும் எதிர்காலமும்.

உலகப் பொழுதுபோக்குத் தொழிற்துறையிடமிருந்து ஒரு முக்கிய தகவல்:

**நினைவிருக்கிறதா?**




நல்லது, இப்பொழுது ஒரு புதிய பூதம் பொழுதுபோக்குத் தொழிற்றுறையின் நிர்வாக அறைகளை ஆட்டிப்படைத்து அலைக்கழிக்கிறது...




இக்கேலிச்சித்திரமானது 2009ம் ஆண்டு **Dylan Koorocks** இற்கு பதிப்புரிமையுடையதல்ல.
இத்தமிழாக்கமானது 2009 ஆண்டு மு. மயூரனுக்குப் பதிப்புரிமையுடையதல்ல.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு.
இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA